## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## இலங்கைச் சுங்கத் திணைக்களம்

# இலங்கை சுங்கத் திணைக்களத்தில் II ஆம் தரத்தில் உதவி சுங்க அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் II ஆம் தரத்தில் உதவி சுங்க அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த பரீட்சைக்குத் தகுதிபெற்றுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு, நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப் படும் (Online) விண்ணப்பப்படிவங்கள் மாத்திரமே இதற்காக ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான இறுதித் திகதி 2026.06.08 ஆகும்.

குறிப்பு 1 : நிகழ்நிலையில் விண்ணப்பப்படிவத்தினை ஏற்றுக் கொள்வதானது 2026.05.11 ஆம் திகதியன்று மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகின்ற அதே வேளையில் 2026.06.08 ஆம் திகதியன்று பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் II ஆம் தரத்தில் உதவி சுங்க அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடைபெறும் திகதியானது உரிய காலத்தில் அறிவிக்கப்படும். பரீட்சையினை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உரித் தளிக்கப்பட்டுள்ளது.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஆண்/பெண் இரு தரப்பினர்களிடமிருந்தும் மேற்குறித்த பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **தகைமைகள்:**

(i) விண்ணப்பதாரர்கள் (ஆண்/பெண்)

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(ஆ) நல்லொழுக்கமுடையவராக இருத்தல்;

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல், இதற்கான தகுந்த சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும். (அதற்கிணங்க, விண்ணப்ப தாரரது பிறந்த திகதி, 2005.06.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும், 1991.06.08 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்ரோ இருப்பின் மாத்திரம்)

குறிப்பு 2 : ஏதேனும் சமயப் பிரிவொன்றில் மதகுரு அந்தஸ்திலிலுள்ள எந்தவொரு நபருக்கும் இப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப் படமாட்டாது.

(ii) உடற் தகைமை: - ஆண் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் 5 அடி 5 அங்குலத்திற்குக் குறையாத உயரத்தினையும், மார்பு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலத்திற்கு குறையாத சுற்றள வினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

பெண் விண்ணப்பதாரர்கள் 5 அடி 3 அங்குலத்திற்கு குறையாத உயரத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) கல்வித் தகைமை: விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வரும் பின்வரும் கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப் பட்ட மூன்று (03) ஆண்டுகளுக்குக் குறையாத கற்றல் காலத்துடன் கூடிய பட்டம்

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியினைப் பெற்றிருத்தல் (விருப்பத்திற்குரிய பாடப் பெறுபேறு கவனத்திற்கொள்ளப்படமாட்டாது)

அல்லது

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர் தர) பரீட்சைகுரிய பாடங்களில் ஒன்றாக ஆங்கில மொழிக்குத் தோற்றி, அதில் (ஆகக் குறைந்தது) சாதாரண சித்தியினைப் பெற்றிருத்தல்.

குறிப்பு 3 : பட்டப்படிப்புப் பரீட்சை முடிவுகளுக்காகக் காத்திருக்கும் எவருக்கும் இப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. ஆயினும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பட்டப்படிப்புப் பரீட்சையொன்றின் விண்ணப்பதாரர் தேர்ச்சிபெற்றுள்ளார் என்ற விடயத்தினை உள்ளடக்கி, குறித்த பல்கலைக் கழகத்தின் பதிவாளரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ கடிதத்தைமொன்றினை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கையில் குறித்த விண்ணப்பதாரரும் இப்பரீட்சையில் தோற்று வதற்கு அனுமதிக்கப்பட முடியும்.

03. **சேவை நியதிகள்:**

(I) சம்பளம் - இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத் திட்டம் பின்வருமாறு.

10/2025 ஆம் இலக்க, பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய, MN – 5 என்ற சம்பளத் தொகுதியில் ரூபா 58,660-10x1,190-11x1,360-15x1,670 - ரூபா 110,570.00 ஆகும்.

(II) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியக் கொடுப்ப வினை வழங்குவது தொடர்பில் அரசாங் கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள கொள்கைத் தீர்மானங்களுடன் விண்ணப்ப தார்கள் இணங்குதலும் வேண்டும்.

(III) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட தகுதி காண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டுவர்.

(IV) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு தகுதியானவர் என்பதை நிரூபிப்பதற்காக அரசாங்க மருத்துவ அதிகாரி ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும்.

(V) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இரவிலும் பகலிலும் நிறைவேற்றுவதற்கும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும். அதேபோன்று நாட்டின் எப்பிரதேசத்திலும் கடமையினை நிறைவேற்றுவதற்கு கடப்பட்டுள்ளனர்.

(VI) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அல்லது பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் விண்ணப்பதாரர்களின் நடத்தை பற்றி இலங்கைப் பொலிஸிடமிருந்து அறிக்கை யொன்று கோரப்படும். அதன் பிரகாரம் சுங்கத் திணைக்களத்தில் சேவையாற்றுவதற்கு தகுதியற்றவர் என்பதாக பணிப்பாளர் நாயகம் அவர்களினால் தீர்மானிக்கப்படுவபர்களின் விண்ணபத்தை நிராகரிப்பதற்கு அல்லது சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(VII) இந்த வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I இன் (IIஅ) ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கும் போது ஏற்புடையதான பொது நிபந்தனைகள் மீதும் பரீட்சார்த்திகள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

04. **பாடவிதானம் :** எழுத்து மூலப் பரீட்சை இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டுள்ளது. அதன் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (1) | உளச்சார்பு (01 மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| (2) | ஆங்கில மொழி (1½ மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| | மொத்தம் | 200 புள்ளிகள் |

**உளச்சார்பு வினாத்தாள்**: இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரர்களின் தர்க்க மற்றும் மொழிப் பகுப் பாய்வுத் தேர்ச்சித் திறனினை தீர்மானிக்கும் வகையிலான ஐம்பது (50) பல்தேர்வு வினாக்களையும் சுருக்க விடைகளைத் தெரிவிப்பதற்கான வினாக்களயும் கொண்டதாகவும் அமையும். அதற்கமைய, விண்ணப்பதாரர்கள் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**ஆங்கில மொழி வினாத்தாள்** : இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரர்களின் ஆங்கில மொழியுடன் சம்பந்தப் பட்ட வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை அளவிடுவதற்காக தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாக அமையும். அதற்கமைய, விண்ணப்பதாரர்கள் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

குறிப்பு 4 : இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 02 (iii) இன் பிரகாரம், தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரர்கள், தாம் குறித்த பரீட்சைக்குத் தோற்றிய மொழியிலோ அல்லது அரச கருமமொழி ஒன்றிலோ இப்பரீட்சைக்குத் தோற்றலாம். ஆயினும், விண்ணப்பதாரர்கள் எக் காரணம் கொண்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கின்ற மொழியைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட் டார்கள்.

(i) தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப் பிழைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

(ii) விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதி அட்டையை வழங்குவதானது, விண்ணப்பதாரர் குறித்த பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கு பூரண தகுதியினைப் பெற்றுள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படலாகாது.

(iii) மதிப்பிடுகை - பரீட்சையில் தேர்வதற்காக விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாப்பத்திரத் திற்கும் ஆகக் குறைந்தது 50% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். அவ்வாறு மூன்று பாடத்திலும் தேர்வுப் புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகள் பெறப்பட்டு, தற்போதுள்ள வெற்றிடங்களை விடவும் இரண்டு மடங்கிலான விண்ணப்பதாரர்களின் பெயர்களை உள்ளடக்கி, இலங்கைப் பரீட்சை திணைக்களம், விண்ணப்பதாரர்களின் பரீட்சைசுட்டிலக்கஒழுங்குவரிசைஅல்லதுஅகராதி ஒழுங்குவரிசைக்கு அமைய ஆவணமொன்றினைத் தயாரித்து சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கும். அதற்கமைய, குறித்த ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவர். இதில் விண்ணப்பதாரர்களின் விளையாட்டு திறமைகள் பரீட்சிக்கப்பட்டு பின்வருமாறு 05 புள்ளிகள் வழங்கப்படும். அதன் பின்னர் குறித்த விண்ணப்பதாரர்கள் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவர். இதற்கு விண்ணப்பதாரருக்கு எதுவித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. இங்கு தகைமை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மை போன்ற விடயங்கள் மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

**தகைமையினை மதிப்பீடுசெய்யும் நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல் திட்டம்**

- தேசிய மட்ட போட்டியில் ஒற்றையர் ஆட்டமொன்றில் பங்கேற்றுப் பெறப்பட்ட முதலிடத்திற்காக 05 புள்ளிகளும், இரண்டாமிடத்திற்கு 03 புள்ளிகளும், மூன்றாமிடத்திற்கு 02 புள்ளிகளும் வழங்கப்படும்.
- சர்வதேச ரீதியாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்ற ஒற்றையர் ஆட்டமொன்றில் பெறப்பட்ட முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்காக 05 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெறும் அணியிலுள்ள உறுப்பினராயின் 03 புள்ளிகளையும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணியிலுள்ள உறுப்பினராயின் 02 புள்ளிகளையும், மூன்றாம் இடத்தைப் பெறும் அணியிலுள்ள உறுப்பினராயின் 01 புள்ளியினையும் பெறுவர்.
- இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச ரீதியாக பங்கேற்ற விளையாட்டுப் போட்டியொன்றில் பெறப்பட்ட முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ள அணியிலுள்ள உறுப்பினராயின் 05 புள்ளிகள் வழங்கப்படும்.
- இந்நோக்கத்திற்காக 17 வயதுக்கு கீழானவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- விளையாட்டுப் போட்டிகளுக்காக வழங்கப்படுகின்ற புள்ளிகள் அதிகபட்ச தகைமை ஒன்றுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்படும்.

- நேர்முகத் தேர்வுக்கு சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் யாவும் விளையாட்டு என்ற விடயம் தொடர்பான தேசிய அதிகாரி யொருவரின் சான்றிதழினைப் பெற்று சமர்ப் பித்தல் வேண்டும்.

05 தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறை - எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சியடைந்து, நேர்முகப் பரீட்சையில் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் குறித்த ஆட்சேர்ப்புக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிவெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப நியமனங்களை வழங்குவதற்காக தெரிவுசெய்யப்படுவர். அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பதவி வெற்றிடங்களில் 10% வெற்றிடங்கள் பெண் விண்ணப்பதாரிகளால் நிரப்பப்படும்.

குறிப்பு - 5 சுங்கத் திணைக்கள கடமைகளின் கடப்பாட்டிற்கு அமைய, பெண் அலுவலர்கள் சுழற்சி முறையில் இரவு நேரக் கடமைகளில் ஈடுபடவும் நேரிடலாம்.

05. (I) பரீட்சைப் பெறுபேற்றினை வெளியிடல் – எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகப் பரீட்சைக்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் குறித்த நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு இலங்கைச் சுங்கம் அனுப்பிய பின்னர், எழுத்து மூலப் பரீட்சைப் புள்ளிகள் மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளைக் கூட்டிப் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இறுதி முன்னுரிமைப் பட்டியலினை தயாரித்து சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கும். முன்னுரிமைப் பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமானதொரு திகதியினை சுங்கப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டு அனுப்பிய பின்னர், இலங்கைப் பரீட்சைத் திணைக்களமானது, விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் / மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பெறுபேற்றினை விண்ணப்பதாரர்களுக்கு தபாலிடு வதற்கான அல்லது www.results.examinations.gov.lk எனும் இணையதளம் மூலம் வெளியிடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணை யாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

06. குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி முடிவடைவதற்கு முன்னர் விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் குறித்த பரீட்சைக்காக வேண்டப்பட்ட அனைத்து தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருப்பது கட்டாயமானதாகும்.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) நிகழ்நிலை (Online) விண்ணப்பப் படிவங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை வழியாக அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தினை அடைந்ததன் பின்னர், குறித்த விண்ணப்பப் படிவம் செல்லுபடியானதா அல்லது செல்லுபடியற்றதா என்பது குறித்து செல்லிட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலம் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை வழியில் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு என்பது குறித்து ஏற்படுத்தப்பட்டுள்ள பொது வழிகாட்டுதல்களை (Common Instructions) விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்துகொள்வது நல்லது. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்கையில் இந்த வழிகாட்டுதல்கள் கட்டாயமாகப் பின்பற்றப் படுதல் வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் யாவும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவையில்/ அரசாங்க கூட்டுத் தாபனத்தில்/ நியதிச் சட்டமுறைச் சபைகளில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்ப தாரர்கள்திணைக்களத்தலைவரின்உடன்பாட்டைப் பெற்றதன் பின்னர் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய அதேவேளையில் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவரை தற்போது வகிக்கின்ற சேவையிலிருந்து/ பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதாக திணைக்களத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றை நேர்முகப் பரீட்சைச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) இப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 1000/- ஆகும். பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தும் போது நிகழ்நிலை வழியாக ஏற்படுத்தப் பட்டுள்ள பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளில் ஏதேனுமொரு வழிமுறையொன்றின் கீழ் மாத்திரம் பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துதல்வேண்டும்.

(i) ஏதேனும் வங்கியொன்றின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

(ii) நிகழ்நிலையில் கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய பற்று அட்டை மூலம் (Debit Card with Online Payment Facility)

(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கியிடல் முறைமை மூலம் (Online Banking Method, Flex App of Bank of Ceylon)

(iv) ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையொன்றின் மூலம் (Slip Payment Bank of Ceylon)

குறிப்பு - 6 பரீட்சைகள் தொடர்பாக நிகழ் நிலையில் கொடுப்பனவு செய்து எவ்வாறு என்பது குறித்த வழி காட்டல்கள் இணையதளத்தில் பரீட் சைகளுக்கான தொழில்நுட்ப வழி காட்டுதல்கள் என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(iii) கட்டணம் கிடைக்கப்பெற்றது என்று குறுஞ் செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும். கட்டணம் குறை வாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப் பட்டுள்ள விண்ணப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறையின் கீழ் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதில் ஏற்படும் தாமதங்களை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

08. (I) **பரீட்சைக்கான அனுமதி அட்டை** : வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க மதிப் பீட்டின் பேரில், விண்ணப்பங்கள் கையேற்கப் படும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத் தினைச் செலுத்தி, செம்மையாகப் பூர்த்திசெய்து, விண்ணப்பத்தின் அச்சுப் பதிப்பினை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை நிகழ்நிலையில் மாத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன், இது குறித்து பரீட்சை திணைக்களம் பத்திரிகையிலும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ இணைய தளத்திலும் விளம்பரப் படுத்தும். தங்களது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள், அறிவித் தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளையுடன் தொடர்புகொண்டு இது பற்றி வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவுகையில் விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தனது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றினை சரியாக குறிப்பிட்டு விண்ணப்பக் கடிதமொன்றை இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். இதன் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படுகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு பரீட்சார்த்தி தன்னிடம் வைத்திருக்கும் பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தினை செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தினை அஞ்சல்செய்யுதுள்ள பதிவுசெய்த பற்றுச்சீட்டின் பிரதி என்பனவற்றி னையும் தயாராக வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அனுமதி அட்டையை பரிசீலனை செய்து திருத்தங்கள் இருக்குமாயின் நேர காலத்துடன் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு அமைவாக திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(II) **பரீட்சைக்கு அனுமதித்தல் :** பரீட்சைக்குத் தோற்று கின்ற விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பரீட்சை அனுமதிப்பத்திரத்திலுள்ளதமதுகையொப்பத்தினை உறுதிசெய்தல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்கு உரிய பரீட்சை நிலையத்திலும் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதற் தினத்திலேயே தமது கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை விண்ணப்ப தாரர்கள் பரீட்சை நிலைய மேற்பார்வை யாளர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு கையொப்பத்தினை உறுதிப்படுத்த தவறும் விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்று வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. இந்த வர்த்தமானி அறிவுத்தலில் பகுதி I (IIஅ) பந்தியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவிகளுக்கு நியமிக்கும் போது ஏற்புடையதான பொது நிபந்தனைகள் இதற்கும் ஏற்புடையதாகக் கருதப்படும். அவற்றினை விண்ணப்பதாரர்கள் கட்டாயமாகப் பின்பற்றுதல் வேண்டும்.

(III) பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சாத்திகள் கீழ்படிதல் வேண்டும். இந்த ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படா விடின், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டணைகளுக்கு அவர்கள் ஆளாக நேரிடலாம்.

குறிப்பு - 7 : பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது, விண்ணப்பதாரர் பரீட் சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க சான் றாக கருதுதல் ஆகாது.

09. பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் திருப்தியுறும் வகையில் விண்ணப்பதாரர்கள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் தமது ஆள் அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்காள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே, விண்ணப்பதாரர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத்தக்க வகையில் முகங்களையும் காதுகளையும் திறந்து இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தத்தக்க வகையில் இரு காதுகளையும் மறைக்காதவண்ணம் பரீட்சை நிலையத்தினுள் நுளைய வேண்டும். தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தினுள் நுளைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை நிலையத்தினுள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து நிலையத்தை விட்டு வெளிசெல்லும் வரையில் முகம் மற்றும் இரு காதுகளையும் திறந்து இருத்தல் வேண்டும்.

10. **தகைமைச் சான்றிதழ்கள் :**

(i) விதிக்கப்பட்டுள்ளவாறு, வேண்டப்பட்ட விபரங்களை விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு தேவையான தகவல்களைக் கொண்டு முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரர்கள் ஆவணச் சான்றிதழ்களை சமர்ப்பித்து தமது சுய தகைமையினை நிரூபித்தல் வேண்டும்.

(iii) நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பொறுப்புவாய்ந்த ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

குறிப்பு – 8 குறித்த குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழக்கறிஞர், பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் அல்லது அரசாங்க பதவியொன்றில் பதவிநிலைத் தரத்திலுள்ள நிரந்தர அலுவலர் அல்லது பொதுவாக நன்கு பிரபல்யமான, நேரடியாக தகவல் களைக் குறிப்பிடப்பட்டு பெற்றுக்கொள்ள முடியுமானவர்கள் எவரிடமிருந்தும் பெறலாம். குணநலச் சான்றி தழினை வழங்கும் நபரது பதவிப் பெயர், பெயர், முகவரி என்பன அதில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். (அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றினை வகிக்கும் விண்ணப்பதாரர்கள் குணநல சான்றிதழ்களை சமர்ப்பிப்பதற்கு அவசியமாகாது)

(ஆ) விண்ணப்பதாரரின் பிறப்பினைப் பதிவுசெய்வதற்கான அத்தாட்சிப் பத்திரத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி அல்லது (பிறப்பு பதிவுசெய்யப்படாத விண்ணப்பதார்களாயின்) பதிவாளர் நாயகத்தினால் வயது தொடர்பில் வழங்கப்பட்ட விசேட சான்றிழ்

குறிப்பு - 9

I. பாடசாலைப் பாவனைக்காக அல்லது கல்வித் தேவைகளுக்காக வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பெறப்பட்ட சான்றுபடுத்தப்பட்ட பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

II. பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக சத்தியக் கடதாசி அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்தி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27ஆம் மற்றும் 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

III. இலங்கைப் பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை எடுத்துக்காட்டுவதற்கான ஆவணம். (ஏற்புடையதாயின்)

IV. கல்வித் தகைமைகள் பற்றிய மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாத விடத்து அதனோடு தொடர்புபற்ற ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள். அதாவது, விண்ணப்பதாரர் பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார் என்று பல்கலைக்கழக பதிவாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ கடிதம் மற்றும் பரீட்சைத் திணைக்களத்தினால் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கில மொழில் திறமைச் சித்தி அல்லது (கல்விப் பொதுத் தராதரப்

பத்திர உயர்தரப்) பரீட்சையில் ஆங்கில மொழிக்காக விண்ணப்பதாரர் சாதாரண சித்தியினைப் பெற்றுள்ளார் என்று குறிப்பிட்டு வழங்கப்பட்ட பரீட்சையின் பெறுபேற்றுத் தாள்

V. தேசிய மட்டத்தில் அல்லது இலங்கை நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச ரீதியான விளையாட்டு போட்டிகளில் காட்டிய திறமை தொடர்பில் பெற்றுக்கொண்ட ஆவணச் சான்றிதழ்.

VI. விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கையில் அதற்குத் தேவையான சகல ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும் படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர். மேலும் வேண்டப்படுகையில் தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றை சமர்ப்பிப்பதற்குத் தாமதிக்கின்ற விண்ணப்பதரர்கள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.

11. போலியான தகவல்களை சமர்ப்பித்தல் - பரீட்சைக்கான சட்டதிட்டங்களுக்கு அமைய, எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர் என பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது எச்சந்தர்ப்பத்திலும் தெரியவருமிடத்து, குறித்த விண்ணப்பதாரர் இப் பரீட்சைக்கான பரீட்சார்த்த உரிமையினை இழக்கிறார் என்பதோடு மாத்திரமல்லாது, விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள எவையேனும் விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டிய வரையில் பொய்யானவை என்று அல்லது எவையேனும் முக்கிய விபரங்களை வேண்டுமென்றே மறைத்து போலியான விபரங்களை வழங்கியுள்ளார் எனக் கண்டறியப்படும் விடத்து அல்லது அவரது சேவைக் காலத்தின் எக்காலப் பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பினை இழந்தவர் என நிரூபிக்கப்படும் பட்சத்தில், அவர் உடனடியாக சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவார். இவ்வறிவித்தலில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திராதுள்ள விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்த உரிமையும் நிராகரிக்கப்படும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் தற்றுணிவின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தல்களில் மொழிகளுக்கிடையே ஏதேனும் இணக்கமின்மை உள்ளமை பற்றி தெரியவருமிடத்து, சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அறிவித்தலே மேலோங்கிக் காணப்படும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்

இலங்கை சுங்கத் திணைக்களம்.
"சுங்க இல்லம்",
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11

05-71